<u>நெல்லிக்குப்பம் நகராட்சி</u>
<u>நகர் மன்றக் கூட்டம் நிகழ்ச்சி நிரல்</u>

2020–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 30ம் தேதி (31.10.2020) சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு நெல்லிக்குப்பம் நகராட்சி ஆணையர் அறையில் நடைபெற உள்ள நகர் மன்றத்தின் சாதாரண கூட்டத்தில் முடிவு செய்யப்படவுள்ள மன்றப்பொருள்கள் விபரம்.

முன்னிலை : – திரு. எஸ்.பிரபாகரன்
தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி

<u>மன்றபொருள்.1.</u> நெல்லிக்குப்பம் நகராட்சியினை தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திறந்த வெளி கழிப்பிடமற்ற நகராட்சி என மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை மூலம் சான்று பெற நகராட்சி பகுதியில் உள்ள வார்டு எண்.01 முதல் 30 முடிய 30 வார்டுகளில் கழிவறை இல்லாத வீடுகளை கணக்கீடு செய்து தூய்மை இந்தியா திட்ட இயக்கத்தின் கீழ் தனிநபர் கழிவறை கட்டும் திட்டத்தின் மூலமாக 3093 க.விறைகள் கட்டி முடிக்கப்பட்டு, குடியிருப்புகளில் வசிக்கும் பொதுமக்ககளின் பயன்பாட்டில் உள்ளது. மேலும், கழிவறை கட்ட இடவசதி இல்லாத குடியிருப்புகளை கண்டறிந்து அதனையும் கணக்கெடுப்பு செய்து அப்பகுதிகளில் சமுதாய கழிவறைகள் 21 எண்ணிக்கைகள் புணரமைப்பு செய்தும், புதியதாகவும் கட்டியும் பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் நகராட்சி மூலம் சீர் செய்து பயன்பாட்டில் உள்ளது. பேருந்து நிலையத்தில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு ஒரு பொது கழிவறையும் ம்மைய பெற்றுள்ளது. எனவே, பொதுமக்கள் எவரும் திறந்த வெளியினை கழிப்பிடமாக பயன்படுத்துவதினை தவிர்த்திடும் பொருட்டு நகராட்சியில் உள்ள வார்டுகளிலும் தனிநபர் கழிவறைகள், சமுதாய கழிவறைகள் மற்றும் பொது கழிவறையாவும் அமைக்கப்பட்டு, பொதுமக்கள் அனைவரும் கழிவறைகளை பயன்படுத்தி வருவதினால், மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை அமைச்சகம் சார்பில் திறந்தவெளி கழிப்பிடமற்ற நகராட்சி(ODF) என சான்று பெறப்பட்டது.

இதனையடுத்து தற்சமயம் நகராட்சி பகுதியில் வார்டு எண்.01 முதல் 30 முடிய வசிக்கும் பொதுமக்கள் எவரும் திறந்த வெளியில் மலம் கழித்தல் மற்றும் சிறுநீர் கழித்தல் போன்ற செயல்களை செய்யாமல் தனிநபர் கழிவறை, சமுதாய கழிவறை மற்றும் பொது கழிவறை இவற்றையே பயன்படுத்தி வருகின்றனர். எனவே, திறந்த வெளியில் மலம் கழித்தல் மற்றும் சிறுநீர் கழித்தல் அற்ற நகராட்சியாக (ODF+) அறிவிப்பு செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்
2. திறந்தவெளி கழிப்பிட மற்ற நகராட்சி(ODF+) என அறிவிப்பு செய்திட தினசரி நாளிதழில் விளம்பரம் செய்து பொதுமக்களிடமிருந்தும், வியாபாரிகள் மற்றும் தன்னார்வலர்களிடமிருந்து ஆட்சேபனை மற்றும் கருத்துகள் குறித்து தெரிவித்திட தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யலாம்.
3. தினசரி நாளிதழில் விளம்பரம் செய்வதற்கான கட்டணத்தினை தூய்மை இந்தியா திட்ட நிதியிலிருந்து செலவு செய்யலாம்.

<u>ந.க.எண்.2438/2018/எச்2</u>

**தீர்மான எண் : 144 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

<u>மன்றபொருள்.2.</u> நெல்லிக்குப்பம் நகராட்சி தூய்மை இந்தியா திட்டம் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை அமைச்சகத்தின் மூலம் (MOUD) நட்சத்திர மதிப்பீடு (Star Rating) ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்புகளுக்கும் வழங்கி வருகின்றனர் . அதன் ஒரு பகுதியாக நெல்லிக்குப்பம் நகராட்சி பகுதியில் சேகரமாகக்கூடிய திடக்கழிவுகளை திடக்கழிவு மேலாண்மை விதிகளின் படி முறையே தரம் பிரித்து கையாளப்பட்டு வருகிறது . மேலும் , இரண்டாம் நிலை

திடக்கழிவு சேகரிப்பது மற்றும் அதனை எடுத்து செல்வது ( Secondary Storage and Transportation) முற்றிலும் தவிர்க்கப்பட்டுள்ளது .

எனவே , நெல்லிக்குப்பம் நகராட்சியினை குப்பையில்லா நகராட்சியாக (Garbage free city) மூன்று நட்சத்திர மதிப்பீடு அங்கீகாரம் (Three Star Rating) பெற சுய உறுதிமொழி சான்று (Self Declaration) நகர் மன்றம் மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு , இப்பொருள் குறித்த பொது மக்களின் ஆட்சேபனைகள் மற்றும் கருத்துக்கள் இருப்பின் எழுத்து மூலமாக 15 தினங்களுக்குள் தெரிவித்திட ஏதேனும் ஒரு தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்து மேல் நடவடிக்கை தொடரலாம் என்பதினை மன்றத்தின் பார்வைக்கும் , பதிவிற்கும் வைக்கலாம் .

அலுவலகக் குறிப்பு:

1. மன்றம் பதிவு செய்யலாம் .
2. நெல்லிக்குப்பம் நகராட்சியினை குப்பையில்லா நகராட்சியாக மூன்று நட்சத்திர மதிப்பீடு அங்கீகாரம் பெற சுய உறுதி மொழி சான்று நகர் மன்றம் தீர்மானம் நிறைவேற்றலாம் .
3. பொது மக்கள் ஆட்சேபனை குறித்து 15 தினங்களுக்குள் அலுவலகத்திற்கு எழுத்து மூலமாக தெரிவித்திட தினசரி நாளிதழ் ஒன்றில் விளம்பரம் செய்து மேல் நடவடிக்கை தொடரலாம் .

**ந.க.எண். 2438/2020/எச்2.**

**தீர்மான எண் : 145 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .**

<u>மன்றபொருள்.3.</u> நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட சார்பதிவாளர் அலுவலகம் முதல் மேற்கு புற நகர எல்லை (திருக்கண்டேஸ்வரம்) வரை பண்ருட்டி கடலூர் சாலையினை எதிர்கால மக்கள் தொகையினை கருத்தில் கொண்டு சென்னை – கன்னியாகுமரி தொழிற்தடத் திட்டம் சாலையை சுமார் 75'0' அகல சாலையாக மாற்ற இந்நகராட்சி தீர்மானம் எண் 323 நாள். 23.12.2019ல் தீர்மானம் நிறைவேற்றி நடவடிக்கைக்கு அனுப்பப்பட்டுள்ளது

மேலும், மேற்கண்ட சாலையில் இருபுறமும் உள்ள 6 பேருந்து நிறுத்தக் கட்டிடங்களை அப்புறப்படுத்தி புதியதாக கட்ட தடையில்லா சான்று வழங்குமாறு கோட்டப் பொறியாளர் அவர்கள் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

நெல்லிக்குப்பம் நகராட்சி சாலையில் இருபுறமும் உள்ள 6 பேருந்து நிறுத்தக் கட்டிடங்களில், புதியதாக அமைக்கப்பட்டது 3 பழைய RCC பேருந்து நிறுத்துமிடங்கள் 3 ஆகும். இவற்றில் 3 RCC பேருந்து நிறுத்துமிடங்கள் பராமரிப்பின்றி பழையனவாக இருந்தாலும் நல்ல நிலையில் உள்ளது என நகராட்சி பொறியாளர் குறிப்பு வழங்கியுள்ளார்.

மேலும், சாலை அமைக்க சுமார் 75'0' அகலம் உள்ள நிலம் கையகப்பப்படுத்திட நீண்ட காலம் ஆகும்படியால் அது வரை இப்பேருந்து நிறுத்தக் கட்டிடங்கள் உள்ளபடியே இருக்கவும், சாலை விரிவாக்கம் செய்யப்படும் நேர்வில் அதனை அப்புறபடுத்திட அவசியம் ஏற்படும் பேருந்து நிறுத்தக் கட்டிடங்களை அகற்றி நவீன முறையில் பேருந்து நிலையம் (Bus Shelter) அமைக்க நிபந்தனையுடன் வழங்க மன்றத்தின் அனுமதிக்கும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு . ஏற்கலாம்.

**<u>ந.க.எண்:- 2727/2019/F1</u>**

**தீர்மான எண் : 146 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .**

<u>மன்றபொருள்.4.</u> நெல்லிக்குப்பம் நகராட்சி பொது சுகாதாரம் நகர் பகுதியில் கொரோனா தொற்று வராமல் தடுத்திடும் பொருட்டு தீவிர தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்கள் அனுப்பப்பட்ட குறுஞ்செய்தியில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(MAWS) துறை, கூடுதல் தலைமை செயலாளர் அவர்கள் வழங்கி உள்ள அறிவுரையின்படி, அனைத்து பொதுமக்களும் முககவசம் அணிய வேண்டும். தவறினால் அபராதம் ரூ.200/– என்பதினை பொதுமக்கள் அறியக்கூடிய அளவில் எளிய வகை ஸ்டிக்கர்ஸ் அனைத்து பொது இடங்கள், குடியிருப்புகளில் ஒட்டி விளம்பரம் செய்திட வேண்டும் எனவும், 2ம் நிலை நகராட்சியாக இருப்பின் 10,000

எண்ணிக்கைக்கு குறைவில்லாமல் அச்சடிப்பு செய்திட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளதினால், கூட்டுறவு நிறுவனமான தமிழ்நாடு பல்நோக்கு சேவை தொழிற் கூட்டுறவு சங்கம் லிட், திருச்சியில் 10,000 எண்ணிக்கை ஸ்டிக்கர் அச்சடிப்பு செய்து வழங்கிட உத்திரவு வழங்கவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.75,000/–க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியத்தினை கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. அச்சடிப்பு பணி கூட்டுறவு நிறுவனத்தில் மேற்கொள்ளப்பட்ட காரணத்தினால் செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1030/2020/எச்1**

**தீர்மான எண் : 147 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

<u>மன்றபொருள்.5.</u> நெல்லிக்குப்பம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணி மேற்கொள்ள பயன்படுத்தப்பட்டு வரும் வாகன எண் TN31 AH 6645க்கு 12v 13 Plate வாங்க பெற்று மூன்று ஆண்டுகளுக்கு மேலாகி விட்டதால், பயன்படுத்த முடியாத நிலை உள்ளதினால், புதியதாக பேட்டரி–1 எண்ணிக்கை வாங்கி வழங்கிட அனுமதியும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.5000/– இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு. 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடரலாம்.

**<u>ந.க.எண்.1768/2020/எச்1</u>**

**தீர்மான எண் : 148 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

<u>மன்றபொருள்.6.</u> நெல்லிக்குப்பம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணி மேற்கொள்ள பயன்படுத்தப்பட்டு வரும் வாகன எண் TN31 AH 6645ல் இன்ஞின் மற்றும் இதர குறைபாடுகளை பழுதுநீக்கம் சரி செய்திடும் பணிக்கு அங்கீகாரம் பெற்ற நிறுவனமாக VST சர்வீஸ் ஸ்டேசன், கடலூர் என்ற நிறுவனத்திற்கு ரூ.90000/–யை இந்நகர மன்ற தீர்மான எண்.98, நாள்.31.07.2020ல் அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. மேலும், VST சர்வீஸ் ஸ்டேசன், கடலூர் என்ற நிறுவனத்திலிருந்து வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ.102868/– வரப்பெற்றுள்ளது. இது அனுமதித்துள்ளதை விட அதிகமாக உள்ளதால், மேலும் ரூ.15000/– இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு. மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1768/2020/எச்1**

**தீர்மான எண் : 149 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

<u>மன்றபொருள்.7.</u> நெல்லிக்குப்பம் நகராட்சியில் பகுதியல் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள வீடு தோறும் முதிர் கொசுக்கள் அழிப்பதற்கு இரண்டு சிறிய புகைப்பான் எந்திரங்கள் (Super Fog Portable Type Thermo Fogging Machine Tank Capacity - 5Lts, Petrol, Tank- 1Lt with Auto Start Starting System) இரண்டு எண்ணிக்கைகள் சப்ளை செய்யப்பட்டது. எனவே அதற்கான பட்டியல் தொகை ரூ.1,45,200/– ஐ தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு – 15ன் கீழ் சிஸ்டம் என்ஜினியரிங், ராமாபுரம், சென்னை–89 என்ற நிறுவனத்திற்கு வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: மன்றம் பதிவுக்கு அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.2338/2020/எச்1**

**தீர்மான எண் : 150 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .**

**<u>மன்றபொருள்.8.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சியில் முதிர் கொசுக்கள் ஒழித்திட பயன்படுத்தபடும் பெரிய புகைப்பான் எந்திரம் – 1, சிறிய புகைப்பான் (கையினால் அடிக்கக்கூடியது) எந்திரம் – 1 ஆக இரண்டு எந்திரங்கள் சென்னை–89, ராமாபுரம், சிஸ்டம் என்ஜியரிங் மூலம் பழுதுகள் அகற்றி சரி செய்து தற்சமயம் நல்ல முறையில் இயங்கக்கூடிய அளவிற்கு வழங்கப்பட்டுள்ளதாக துப்புரவு ஆய்வாளர் மற்றும் துப்புரவு அலுவலர் சான்று வழங்கி உள்ளனர். எனவே பட்டியல் தொகை ரூ.9860/– ஐ தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு – 15ன் கீழ் சிஸ்டம் என்ஜினியரிங், ராமாபுரம், சென்னை–89 என்ற நிறுவனத்திற்கு வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: மன்றம் பதிவுக்கு அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.2337/2020/எச்1.**

**தீர்மான எண் : 151 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .**

**<u>மன்றபொருள்.9.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி விஸ்வநாதபுரம் சாலையில் உள்ள தேன்குட்டை குளத்தில் தண்ணீர் மாதிரி எடுக்கப்பட்டுள்ளது . தேன் குட்டை நிலத்தடி நீர் மாசுபட்டுள்ளதா , இல்லையா என தண்ர் பரிசோதனை ஆய்வு செய்வதற்கு உரிய தொகை ரூ. 4290/– தமிழ்நாடு மாசு கட்டுபாட்டு வாரியம் , கடலூர் அவர்களுக்கு நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

அலுவலகக் குறிப்பு:
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம் .

**<u>ந.க.எண்.2337/2020/எச்1.</u>**

**தீர்மான எண் : 152 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**<u>மன்றபொருள்.10.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி பொது சுகாதாரம், டெங்கு காய்ச்சல் நகர் பகுதியில் வராமல் தடுத்திடும் பொருட்டு, DBC பணியாளர்கள் வீடுகள் தோறும் சென்று கொசு புழுக்கள் உருவாகும் கொள்கலன்களை அழித்திடவும், 40 DBC பணியாளர்களை மகளிர் சுய உதவிக்குழு மூலம் நியமிக்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. DBC பணியாளர்கள் வீடு தோறும் ஆய்வு செய்திடும்போது, அதற்கான படிவங்களில் பூர்த்தி செய்திட, நகராட்சியில் படிவங்கள் இல்லாத காரணத்தினால், உள்ளூர் அச்சகங்களில் விலைப்புள்ளிகள் பெற்று 5000 படிவங்கள் அச்சடித்திட விலைப்புள்ளி கோரியதில், கீழ்கண்ட அச்சகங்களிலிருந்து விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | விலைப்புள்ளிதாரர்களின் பெயர் | ஒன்றின் விலை |
|---|---|---|
| 1 | புகலிடம் கிராபிக்ஸ்,<br>315, மெயின் ரோடு,<br>நெல்லிக்குப்பம். | ரூ.4,850/– |
| 2 | ராஜா பிரிண்டர்ஸ்,<br>240, மெயின் ரோடு,<br>நெல்லிக்குப்பம். | ரூ.4,800/– |
| 3 | அன்பு பிரஸ்,<br>50, சீத்தாராம் நகர்,<br>காராமணிகுப்பம். | ரூ.4,950/– |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்.2ல் கண்டுள்ள ராஜா பிரிண்டர்ஸ், நெல்லிக்குப்பம் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளி மற்ற இரண்டு நிறுவனங்களை விட விலை குறைவாக இருப்பதினால், அந்நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கியதற்கும், அதற்கான பட்டியல் தொகை ரூ.4,800/– வழங்கியமைக்கு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு . மன்றத்தின் பதிவுக்கு வைக்கலாம்

**ந.க.எண்.2015/2017/எச்1**

**தீர்மான எண் : 153 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .**

**மன்றபொருள்.11.** நெல்லிக்குப்பம் நகராட்சி பொது சுகாதாரம் நகர் பகுதிகளில் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொருட்டு, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதத்தின்படி, 300 குடியிருப்புகளுக்கு ஒரு DBC பணியாளர் நியமித்து வீடுகள் தோறும் சென்று பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திடவும், குடியிருப்பு பகுதிகளில் கொசு புழுக்கள் உருவாகும் கொள்கலன்களை அழித்திடவும் 40 DBC பணியாளர்களை நியமிக்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. DBC பணியாளர்கள் வீடு தோறும் ஆய்வு செய்திடும் பணியினை அதற்கான உரிய படிவத்தில் பதிவு செய்திடுவதற்கு படிவங்கள் நகராட்சியில் இல்லாத காரணத்தினால், அவசர அவசியத்தினை கருதி 5000 படிவங்கள் உள்ளூர் அச்சகங்ளில் விலைப்புள்ளி பெற்று அச்சடித்திடவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.5000/– மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்

2. அவசர அவசியத்தினை கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று, விலைப்புள்ளி கோரியதற்கும், செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 2015/2020/எச்1**

**தீர்மான எண் : 154 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.12.** நெல்லிக்குப்பம் நகராட்சி ஜீவா நகர், வார்டு –16, அருகில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான பங்க் எண் :7 (வ.வி.எண்.094/37) திரு. கலியபெருமாள் பெயரில் உள்ளது. மேற்படி பங்க், ஜீவாநகர் பகுதிக்கு செல்ல இடைஞ்சலாக உள்ளதால் மேற்படி பங்கினை காலி செய்ய பொதுமக்கள் பலர் மனு செய்து இந்நகராட்சி வருவாய் ஆய்வர் மூலம் நடவடிக்கை மேற்கொண்டு பலமுறை எச்சரிக்கை செய்தும், அறிவிப்புகள் வழங்கியும் பங்கினை காலி செய்யவில்லை. 12.10.2020 தேதிய இவ்வலுவலக வருவாய் ஆய்வர் (பொ) குறிப்பின்படி மேற்படி கடை குத்தகை இனத்தை காலி செய்யவும் கோப்பினை ரத்து செய்யவும், வாடகை நிலுவையினை டெபாசிட் தொகையிலிருந்து ஈடு செய்யவும் மன்றப் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** நெல்லிக்குப்பம் ஜீவாநகர் முன்புறமுள்ள குத்தகை இனமான பங்க் எண்,7 பொதுமக்களுக்கு இடையூறாக இருப்பதால் கேட்பிலிருந்து நீக்கம் செய்யலாம். வாடகை நிலுவையை டெபாசிட் தொகையிலிருந்து சரி செய்யலாம்.

**ந.க.எண்:- 171/2018/A1**

**தீர்மான எண் : 155 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.13..** அரசாணை எண் . 298 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் . 02.09.2020ல் அரசாணையில் கொரோனா நோய் தொற்று தடுப்பு பணிக் காரணமாக பிறப்பிக்கப்பட்ட பொது ஊரடங்கு காலத்தில் 01.04.2020 முதல் 31.05.2020 வரை உள்ள காலத்திற்கு உள்ளாட்சி அமைப்புகளில் செயல்படாத கடைகள் /வரியில்லா இனங்களுக்கு வாடகை தொகையினை செலுத்துவதிலிருந்து விலக்கு அளித்து உத்திரவிடப்படுகிறது . மேற்படி அரசாணையினை மன்றத்தின் பார்வைக்கும் , பதிவிற்கும் வைக்கப்படுகிறது .

அலுவலகக் குறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 2665/2020/எ1**

**தீர்மான எண் : 156 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி